
# மாயவலை

120

பா.ராகவன்



நமசிவாய வாழ்க. நாதன் தாள் வாழ்க. ஓம் ஷின்ரிக்கியோ இயக்கத்தை அல்லது கம்பெனியை (பின்னே, ஆன்மிக சத்துபானமெல்லாம் தயாரிக்க ஆரம்பித்துவிட்டார்கள் அல்லவா?) ஆரம்பித்த உடனேயே ஷோகோ செய்த முதல் காரியம், ஆர்டர் கொடுத்து ஒரு பெரிய சிவலிங்கத்தைத் தனது ஆசிரம அறையில் பிரதிஷ்டை செய்ததுதான். தான் சார்ந்த இடங்கள் அனைத்திலும் சிவபெருமானின் படம் ஒன்றை மாட்டிவைக்கவும் செய்தார்.

சிவன் யார்? அழிக்கும் கடவுள். ஹிந்து மதம் அதைத்தான் கூறுகிறது. ஷோகோ யார்? கெட்ட சக்திகளை அழிப்பதற்காகக் கடவுள் அனுப்பி வைத்த தூதன். எனவே, சிவபெருமானின் படத்தை மாட்டுவதுதான் சாலச் சிறந்தது.


ஷோகோ சிவபெருமானைப் பற்றியும், அவரது உக்கிரதாண்டவம் பற்றியும் தலைக்கு மேலே சுமக்கமாட்டாமல், அவர் கங்கையைச் சுமந்துகொண்டிருப்பது பற்றியும் ஆலகால விஷத்தை தொண்டைக்குள் அடைகாப்பது பற்றியும் தன் தொண்டரடிப்பொடி ஆழ்வார்களிடம் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார்.

கதை கேட்டு வீணாய்ப் போவதற்கென்றே ஒரு கூட்டம் எங்கும் எப்போதும் உண்டல்லவா? ஷோகோவிடம் மாட்டிய சிஷ்யகோடிகளும், சிவபெருமானின் லீலைகளைச் செவிகுளிரக் கேட்டுக் கண்ணில் நீர் சொரிந்து நின்றார்கள். ஷோகோ லேசுப்பட்ட ஆளில்லை என்கிறபடியால், உலகில் வேறு எந்தெந்த மதங்களில் சிவனுக்குக் கிட்டத்தட்ட பொருந்திவரும் கடவுளர்கள் காட்சியளிக்கிறார்கள் என்று தேடிப்பிடித்து, அவர்கள் அத்தனை பேரையும் சிவனுடன் சேர்த்து மிக்ஸியில் அடித்து, அதற்கு ஒரு பவுத்த பவுடர் கோட்டிங் கொடுத்து ஒரு சுழற்றுச் சுழற்றி, ஆதி புத்தரும் பரமசிவனும் ஒன்றே என்று ஒரு புதிய கண்டுபிடிப்பை முன்வைத்தார்.

ஜப்பானில் இருந்த மற்ற மதத்தலைவர்களெல்லாம் சிண்டைப் பிய்த்துக் கொள்ளத் தொடங்கினார்கள். 'யார் இந்த ஆசாமி, எங்கிருந்து கிளம்பி வந்திருக்கிறான், எத்தனை பேர் இந்த மாதிரி புறப்பட்டிருக்கிறார்கள்' என்று கூடிப்பேசி கவலை வளர்த்தார்கள். ஆனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இளைய தலைமுறை ஜப்பானியர்களை ஷோகோ மிகவும் கவரத் தொடங்கினார்.

அவரது மென்மையான பேச்சு. படிப்படியாக அது வீரியமடைந்து உச்சத்தைத் தொடும்போது, அதுவே ஒரு ஊழித்தாண்டவம் போலிருக்கும். திடீரென்று பாடுவார். கெட்ட வார்த்தையால் திட்டுவார். சடாரென்று தியானத்தில் ஆழ்ந்துவிடுவார். கண்கள் நீர் சொரியும். ஓம், ஓம், ஓம் என்று உள்ளம் உருக ஜபம் பண்ணுவார். அனைவரையும் ஓம் சொல்லச் சொல்லி, இரு கரங்களையும் மேலே தூக்கிக் கூப்பி மெல்லத் தன் பெருந்தேகத்தை அசைத்து ஆடுவார்.

ஆ... அது ஓர் அற்புதமான காட்சி. அவரது ஆன்மிக வகுப்புகளுக்குப் போகத் தொடங்கிய



தலாய்லாமாவுடன் ஜோகோ...

ஜப்பானிய இளைஞர்கள், வேலைகளை முடித்ததும் முதல் காரியமாக ஓம் ஷின்ரிக்கியோ ஆசிரமத்துக்குப் போவது என்பதை ஒரு கடமையாகவே வைத்துக் கொண்டார்கள். ரிலாக்ஸேஷன். ஓய்வு. விடுதலை. சுதந்திரம். பூரண சுதந்திரம். அனைத்துக் கட்டுக்களிலிருந்தும்... அழிவு சக்திகளில் இருந்தும்... உலகை அச்சுறுத்தும் சாத்தான்களிடமிருந்தும்!

ஷோகோ புத்திசாலி. கடைந்தெடுத்த புத்திசாலி. தனக்கு முன்னாளில் ஆயிரம் நாளில் ஆன்மிக எழுச்சி என்று உத்தரவாதம் அளித்து, ஏமாற்றிய பவுத்த மடாலய நிர்வாகிகளைப் போல, அபத்தமான வாக்குறுதிகள் எதையும் தன் சீடர்களுக்கு அளிக்கவில்லை. மாறாக, ஒழுங்காகத் தன் வழியைப் பின்பற்றுபவர்களுக்கு சிறு சிறு விடுதலைகள், சிறு சிறு பரவச அனுபவங்கள், சிறு சிறு விழிப்புணர்வுத் தருணங்கள் சாத்தியம் என்று மட்டுமே சொன்னார். 'பல சிறு மறுமலர்ச்சிகள் வாழ்வில் உண்டாகி, அவற்றின் எண்ணிக்கை ஓரளவுக்கு மேல் போகும்போதுதான் கவனமாக அவற்றை ஒருங்கிணைத்து, மூட்டை கட்டி, ஒரு பேரின்பப் பெருவிழா நடத்தி, மாபெரும் மெய்யறிவின் வாசலைத் திறந்துவைப்பேன்' என்று அவர் வாக்களித்திருந்தார்.

ஓம் ஷின்ரிக்கியோ ஆசிரமத்தில் நடைபெறும் பயிற்சி வகுப்புகள் சில தமாஷாக இருக்கும். சீனாவில் பள்ளிகளில் பயிற்றுவிக்கப்படும் ஜிம்னாஸ்டிக் கலையை அங்கே ஒரு தரிசன வகுப்பாக வைத்திருந்தார்கள். 'இரும்புக் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு சொய்யாங் சொய்யாங் என்று சுற்றிவரும்போது' பரமசிவன் உடலுக்குள் ஊடுருவி வெளிப்படுவார் என்று ஷோகோ சொன்னார்.

அதைக் கேட்ட ஜப்பானிய இளைஞர்களில் பலர், மாபெரும் ஜிம்னாஸ்டிக் சாம்பியன்களாகுமளவுக்குக் கம்பிகளில் தொங்கத் தொடங்கினார்கள். ஷோகோ சொன்னது பொய்க்கவில்லை. பரமசிவன் உள்ளே புகுந்து வியர்வையாக வெளியே வரத்தான் செய்தார்.

அது வியர்வை இல்லை. அவர் தலையிலிருந்து உதிரும் கங்கையின் துளிகள் என்று ஷோகோ சொன்னார். ஆஹா என்று தொட்டு நக்கி மகிழ்ந்தார்கள் சிஷ்யகோடிகள்.

பதஞ்சலி முனிவரின் யோக சூத்திரத்தையும், பாரம்பரிய ஜப்பானிய தாந்திரிக வஜ்ராயணம் என்கிற பவுத்தப் பிரிவுத் தத்துவம் ஒன்றையும் ஒரே சாஷேவில் அடைத்து Initiation என்கிற புத்தகம் ஒன்றை எழுதினார் ஷோகோ. எழுதி முடித்து பிரிண்ட் பண்ணி வைத்துக் கொண்டாரே தவிர, யாருக்கும் அதைப் படிக்கக் கொடுக்கவில்லை. 'மேலான ஆன்மிக நிலையை அடைந்தவர்கள் மட்டுமே அந்தப் புத்தகத்தைத் தொடமுடியும்' என்று சொல்லிவிட்டார்.

அப்படி அதில் என்னதான் இருக்கிறது? ஆர்வம் தாங்கமாட்டாத சிஷ்யகோடிகள் அவரை மொய்க்கத் தொடங்கினார்கள்.

'என்ன இல்லை இதில்? இதுதான் எல்லாமே. மெய்ஞானத்தின் உச்சம். இந்தப் புத்தகத்தை நீங்கள் படிக்கத் தகுதி பெறுகிற நாளில், பரம்பொருள் உங்களுக்குப் பிரசன்னமாகும். விடுதலை அடைவீர்கள். புத்தராகிவிடுவீர்கள்.'

இப்படிச் சொல்லியே பிளாக்கில் பல லட்சக்கணக்கில் அந்தப் புத்தகத்தை விற்றுவிட்டார் ஷோகோ.

இப்போதே சொல்லிவிடலாம். அடிப்படையில் ஷோகோ ஓர் ஆன்மிகவாதி இல்லை. மிகத்

தீவிரமான அழிவு காரியங்களை உத்தேசித்திருந்த ஒரு பயங்கரவாதி. ஆனால் தனி மனிதன். தன்னையே ஓர் இயக்கமாகக் கருதியவர். தன் காரியங்களை, கனவுகளைச் சாதித்துக் கொள்ள அவருக்குப் பல்லாயிரக்கணக்கானவர்கள் அடங்கிய ஒரு மாபெரும் படை வேண்டியிருந்தது.

என்ன செய்தால் கூட்டம் வரும் என்று யோசித்தபோது, அவருக்குத் தென்பட்ட வழி ஆன்மிகம். செலவே இல்லாமல் மக்கள் புத்தியை மழுங்கடிக்க அதனைக் காட்டிலும் சிறந்த உபாயம் இல்லை என்று அவருக்குத் தெரிந்திருந்தது. டோக்கியோவில் ஒரு சிங்கிள் பெட் ரூம் அப்பார்ட்மெண்டை வாடகைக்கு எடுத்தாரே, அது ஒன்றுதான் செலவு. அதற்குப் பின் ஷோகோவின் அத்தனை செலவுகளும் பக்தர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது.

யாரோ ஒரு பெரிய வீடு வாங்கிக் கொடுத்தார்கள். கூட்டம் அதிகம் வந்தபோது காணிக்கை அதிகரித்தது. பண்ணை வீடாகப் பார்த்தார்கள். மேலும் பணம் சேர்ந்தபோது, ஒரு கிராமத்தையே வளைத்து அழகாகப் பூத்துக்குலுங்கும் ஆசிரமம் கட்ட முடிந்தது. இன்னும் பணம் சேர்ந்தபோது ஆசிரமத்துக்கு ஏசி பண்ணி, மொசைக் போட்டு, செக்யூரிடி சிஸ்டமெல்லாம் அமைக்க முடிந்தது. ஓயாமல் மேலும் பணம் சேர்ந்தபோது இடத்தை விஸ்தரித்தார்கள். பல இடங்களில் ஆசிரமத்தின் கிளைகள் நிறுவப்பட்டன.

அப்புறம் அந்த ஆன்மிக டிரிங்க். அதன் விற்பனை ஜோராக நடந்தது. தனியே மார்க்கெட்டிங் பிரிவு அமைக்கப்பட்டது. சேல்ஸ் அதிகாரிகள் ஜப்பானின் மூலை முடுக்கெல்லாம் போய் ஓம் ஷின்ரிக்கியோ குளிர்பானத்தை விற்றார்கள். குடிப்பது குளிர்பானம். கிடைப்பது பேரின்பம். கவர்ச்சிகரமான விளம்பர வாசகங்கள்.

மக்களைப் பைத்தியமாக அடித்துத் தன் காலடியில் கொண்டுவந்து குவிக்க அவருக்கு ஆன்மிகம் பயன்பட்டது.

ஆனால், மிகக் கவனமாக இருந்தார். அதுவரை தன் திட்டத்தை அவர் வெளிப்படுத்தவில்லை. சற்றும் வெளிப்படுத்தவில்லை. ஆன்மிக எழுச்சி. மலர்ச்சி. மறுமலர்ச்சி. வேறொன்றுமில்லை.

இயக்கம் சார்பில் யோகா சொல்லிக் கொடுக்க, மெய்யறிவுப் பாதைக்கு டார்ச் அடித்துக்காட்ட பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. 'கொககூ' என்கிற ஜப்பானிய சொல்லுக்கு 'அறிதல்' என்று பொருள். ஷோகோ தன் பள்ளிக்கூடங்களுக்கு 'ஸ்பெஷல் கொககூ' என்று பெயரிட்டார். அத்தனை சுலபத்தில் அங்கே சீட் கிடைக்காது. நிறைய மெனக்கெட வேண்டும். மூட்டை மூட்டையாக ஃபீஸ் கட்டவேண்டும். ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள தனித்தனியே பரீட்சைகள் உண்டு. ஒவ்வொரு பரீட்சைக்கும் பணம் கட்டவேண்டும். ஆயிரம் பேர் பரீட்சை எழுதினால் நாலு பேரைத் தேர்ந்தெடுப்பார்கள். 996 பேர் கட்டிய பணம்? எல்லாம் பரமசிவனுக்கு.

பாவம் சுடுகாட்டில் வசிக்கிற பரமாத்மாவின் பெயரைச் சொல்லி, இப்படியொரு பகல் கொள்ளையா என்று யாரும் கேட்கவில்லை. ஷோகோ பணத்தில் குளித்தார். பணத்தில் படுத்துப் புரண்டார். பணத்தையே ஆடையாக அணிந்து மகிழ்ந்தார். கொஞ்ச நஞ்சப் பணமல்ல. மில்லியன் டாலர் கணக்கில் வந்து குவிய ஆரம்பித்தது.

ராஜ யோகம், குண்டலினி யோகம், மஹாமுத்ர யோகம், அஸ்ட்ரல் யோகம், கேஷுவல் யோகம், ஸ்டார் யோகம் என்று விதவிதமான யோக வகுப்புகள் அங்கே சொல்லிக் கொடுக்கப்பட்டன. சிலது ஏற்கெனவே இருக்கிற யோகங்கள். சில யோகங்கள் டுபாகூர். ஷோகோவின் தயாரிப்புகள். அந்த ஸ்பிரிச்சுவல் குளிர்பானம் மாதிரி.

இம்மாதிரியான காரியங்களால் ஷோகோவின் புகழ் ஜப்பானைத் தாண்டிப் பரவத் தொடங்கியது. யார் யாரோ பெரிய மனிதர்களெல்லாம் அவரைச் சந்திக்க விருப்பம் தெரிவித்தார்கள். அதென்ன

பிரமாதம்? ஷோகோ ஒரு கண்ணைக் காட்டினார். (காட்டக்கூடியதும் ஒன்றுதான்!) உடனடியாக அவரது சிஷ்யகோடிகள் ஓர் ஆன்மிக டூருக்கு ஏற்பாடு செய்தார்கள். சங்கர திக்விஜயம் மாதிரி இது ஷோகோ திக்விஜயம்.

ஃப்ளைட் பிடித்து ஹிமாசலுக்கு வந்து பதினாலாவது தலாய்லாமாவைப் பார்த்து, ஓர் 'ஆன்மிக'ப் பேச்சுவார்த்தை நடத்தி அசத்தினார். காலு ரின்பொச்சே (Kalu Rinpoche) என்கிற பெயர் கொண்ட அந்த அப்பாவி சாதுவைத் தன் ஆசிரமத்துக்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்தார். (அவரும் பாவம், சொன்ன தோஷத்துக்கு ஜப்பானுக்குப் போய் ஓம் ஆசிரமத்தில் கிளாஸெல்லாம் எடுத்தார். பின்னால் பல வருஷம் கழித்துத்தான் ஷோகோவின் ஷோக்கு வாழ்க்கை அவருக்குப் புரிந்தது.) சில ஐரோப்பிய நாடுகளுக்கும் விஜயம் செய்து கிறிஸ்துவப் பாதிரியார்களுடன் போட்டோ எடுத்துக்கொண்டு பத்திரிகைகளுக்குக் கொடுத்தார்.

ஓம் இயக்கம் இதனாலெல்லாம் மிகப் பிரபலமடையத் தொடங்கியது. சீனாவிலிருந்தும் ரஷ்யாவில் இருந்தும் நூற்றுக்கணக்கானவர்கள் ஜப்பானுக்கு வந்து ஷோகோவின் ஆசிரமத்தில் சேர்ந்து, பணம் கட்டி யோகம் பயின்று சென்றார்கள். அப்படிப் போனவர்களைக் கொண்டு ஆங்காங்கே ஆசிரமத்தின் கிளைகளை நிறுவும் முயற்சியை ஓம் நிறுவனத்தின் மார்க்கெட்டிங் ஆபீஸர்கள் பார்த்துக் கொண்டார்கள்.

அது அவ்வாறிருக்க, ஷோகோ மிகக் கவனமாகத் தன் சுயரூபத்தை இனி வெளிக்காட்டலாம் என்று முடிவு செய்து, தன் கல்வி நிறுவனங்களில் இருந்தே அதனை ஆரம்பித்தார். அவருடைய மருத்துவக் கல்லூரியை, சடாரென்று ஒருநாள் பெயர் மாற்றி, 'மருத்துவ அமைச்சகம்' என்று புதிய போர்டு வைத்தார். அதே மாதிரி ஓம் கல்லூரி ஒன்றின் அறிவியல் பிரிவுக்கு 'அறிவியல் அமைச்சகம்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. முதலில் பார்த்த தெய்விக ஜிம்னாஸ்டிக்ஸ் உள்ளிட்ட வீர கலைகளைப் பயிற்றுவிக்கும் பள்ளிக்கூடத்துக்கு 'மினிஸ்ட்ரி ஆஃப் இண்டலிஜென்ஸ்' என்று பெயர் வைத்தார்கள்.

என்ன அபத்தம் இது?

இல்லை. அபத்தம் இல்லை. கல்லூரி, பள்ளிகளெல்லாம் அமைச்சகம் என்றால், நடத்துபவர் யார்?

அதுதான் அவர் விருப்பம். அதுதான் அவரது இறுதி இலக்கு. பேரின்பம், பேரின்பம் என்று சொல்லிக்கொண்டிருந்ததெல்லாம் அதனைத்தான். ஓம் ஷின்ரிக்கியோ என்கிற நிறுவனத்தின் சக்கரவர்த்தியாக அறிமுகமாகி, மெல்ல ஜப்பானை ஆக்கிரமித்து, உலகம் முழுதும் தன் குடையின் கீழ் வரவேண்டுமென்கிற பெருங்கனவு அது. அதற்கான முதல் படியை மிகக் கவனமாக எடுத்து வைத்துவிட்டார் ஷோகோ.

அடுத்தது?

வேறென்ன, யுத்தம்தான். எனில் ஆயுதங்கள் வேண்டுமல்லவா? கூப்பிடு சிஷ்யர்களை.

ஷோகோ, தன் பாணியில் இருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு புதுவிதப் பிரசங்கத்துக்கு ஆயத்தமானார். 'தியானம், யோகாவெல்லாம் கிடக்கட்டும் ஒரு மூலையில். யுத்தம் மூளப்போகிறது. தற்காப்புக்கு நீங்கள் தயாராகவேண்டிய காலம் வந்துவிட்டது. ஓ, சீடர்களே! என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? எழுந்து வாருங்கள்! உலகம் அழியப்போகிறது!'

உரக்கக் குரல் எழுப்பிக் கத்தினார் ஷோகோ. சீடர்கள் வந்து அடிபணிந்து, 'உத்தரவிடுங்கள் குருவே' என்றார்கள்.